1981 பிப்ரவரி 27]

முத்துப்பேட்டை நகரத்திற்கான குடிநீர் திட்டம்

*வினா எண் 290—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம் முத்துப்பேட்டை நகரத்திற்குப் பரக்கலக்கோட்டையிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) தஞ்சை மாவட்டம் முத்துப்பேட்டை நகரத்திற்கு பரக்கலக் கோட்டையிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் 31—3—1981 க்குள் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) 32.37 இலட்சம்.

திரு. பொ. உத்திராபதி : முத்துப்பேட்டை நகரத்திற்குத் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் 1977 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு பல இலட்ச ரூபாய் செலவு செய்து இறுதியில் தண்ணீர் கிடைக்கவில்லை என்று அறிவித்ததற்கும் பிறகு பரக்கலக்கோட்டையிலிருந்து தண்ணீர் எடுத்து கொண்டு வரும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. இப்போது அதிக நாட்கள் கடந்து செல்லுவதால் மீண்டும் தண்ணீர் கிடைக்காது என்ற சூழ்நிலையை அறிவிப்பார்களா? என்ற அச்சம் இருக்கிறது. அந்த அச்சத்தைப் போக்கும் வகையில் அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதிப்படி விரைவில் தண்ணீர் கொடுக்க துரித நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்த முறை ''அச்சம் தவிர்'' 31—3—1981 க்குள் தண்ணீர் கொண்டுவர முயற்சி எடுக்கிறோம்.

பெரியகுளம் கிராம கூட்டுறவு வீட்டு வசதி சங்கம்

*வினா எண் 291—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரிய குளத்திலுள்ள கிராமிய கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலம் கொடைக்கானல் தாலுக்காவில் இதுவரை எத்தனை வீடுகள் கட்டப்பட்டுள்ளன?

(ஆ) கொடைக்கானல் தாலுக்காவுக்கென தனியாக ஒரு சங்கம் அமைக்கும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) பெரியகுளம் கோட்ட கிராம கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் மூலமாக கொடைக்கானல் தாலுக்காவில் இதுவரை கட்டி முடிக்கப் பட்ட வீடுகள் 48.

(ஆ) கொடைக்கானல் தாலுக்காவுக்கென தனியாக ஒரு கூட்டுறவு சங்கம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: இந்தச் சங்கம் ஆரம்பித்து ஏறக்குறைய ஆறு ஆண்டுகளுக்கு மேலாகிறது. இதிலே கொடைக்கானல் பகுதியில் கட்டுமானச் செலவு அதிகமாக ஆகிற காரணத்தால் சரியாக விண்ணப்பங்கள் வரவில்லை என்று தெரிகிறது. எனவே, அந்தச் சங்கத்திலிருந்து கொடுக்கக்கூடிய கடன் தொகையை அதிகப்படுத்தும் உத்தே சம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இப்போது அப்படிப் பட்ட உத்தேசம் இல்லை.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: இந்தச் சங்கத்தின் மூலம் வீடுகள் கட்டுவதற்கு சில குறிப்பிட்ட டிசைன்கள் இருக்கின்றன மலைப்பகுதியான கொடைக்கானலுக்கு அந்த டிசைன்கள் பொருந்தி வராத காரணத்தால் அதிகமாக விண்ணப்பங்கள் வரவில்லை. கொடைக்கானல் போன்ற குளிர் பிரதேசங் களுக்கு தனியாக டிசைன் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ், இராகவானந்தம்: இது பற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, கிராம கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூல மாக கிராமத்திலுள்ள அரிசன மக்களுக்கு மட்டும் தான் வீடு கட்டிக்கொடுக்கப்படும் என்று கூறப்படுகிறது. ஆனால் நகரத்தில் உள்ள அரிசன மக்கள் மிகவும் பின் தங்கிய மோசமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக மதுரையிலே உள்ள வளர்த்த இனத்தை சார்ந்தவர் கள். மிகவும் மோசமான நிலையில் இருந்து கொண்டிருக் கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கூட்டுறவு சம்பந்தப் பட்ட கேள்வி. நீங்கள் கேட்பது மூலக்கேள்விக்குச் சம்பந்தப் பட்டதல்ல.

பீடி சுருட்டுத் தொழிலாளர்கள் வேலை நிலைமைகள்.

*வினா எண். 292—திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) பீடி—சுருட்டு தொழிலாளர் சட்டத்தை அமுல் நடத்துவது பற்றி கண்காணிக்க உள்ள முத்தரப்புக் கமிட்டிக் கூட்டம் 1979 டிசம்பரில் நடந்ததில் விசேஷமாக கவனிக்கப்பட்ட ''வீட்டில் வேலை'' செய்யும் ( Home Workers ) தொழி லாளர்கள் பற்றி என்ன முடிவு செய்துள்ளது ?

(ஆ) இச் சட்டத்தை அமுல் நடத்துவதில் பீடி முதலாளிகள் இதுவரை ஒப்புக் கொள்ளாதவைகள் எவை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 15–12–1979-ல் சென்னையில் தொழிலாளர் துறைத் துணை ஆணை யரும் (ஆய்வு) மற்றும் பீடி மற்றும் சுருட்டுத் தொழிற்சாலை களின் தலைமை ஆய்வாளரின் தலைமையில் முத்தரப்ப குழு வின் ஏழாவது கூட்டம் நடைபெற்றது. அப்போது தொழிலாளர் பிரதிநிதி ஒருவர் கீழ்க்கண்ட கருத்துக்களைச் சொன்னார் :—

(1) பீடி மற்றும் சுருட்டுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் வீட்டுத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட 1966-ஆம் ஆண்டு பீடி மற்றும் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டத்தின் 29-வது பிரிவை தீவிரமாக நடை முறைப்படுத்தல் வேண்டும்.

(2) இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் வீட்டுத் தொழிலாளர் களையும் பீடித் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழி லாளர்களுக்கு இணையாகக் கொள்ள வேண்டும்.

(3) மேற்கண்ட சட்டத்தின்கீழ் இவ் வீட்டுத் தொழி லாளர்களும கொண்டுவரப்பட வேண்டும்.

(4) மேற்கண்ட சட்டத்தின்கீழ் எல்லா நன்மைகளும் இவ் வீட்டுத் தொழிலாளர்களுக்கும் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

(5) அவசியமானால் மேற்கண்ட கருத்துக்கள் குறித்து அரசின் விளக்கத்தைப் பெறுதல் வேண்டும்.